
உ
சிவகுகமயம்.

பழநி ஆண்டவர்

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்
வெளியீடு.



பழநி மலையும், கோயிலும்,

தாருண

வைகாசி, ஆனி கிருத்திகை மலர்.

18—6—1944

ஆசிரியர்:
திரு. ஜே, எம். சோமசுந்தரம் பிள்ளை, பி, ஏ., பி. எல்.,

உதவி ஆசிரியர்:
சைவ சித்தாந்த சரபம், சிவத்திரு: ஈசான சிவாசாரியர்

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்
காரியாலயம், பழநி.

 தனிப்படி அ 4.
1944.

உ

பழநி ஆண்டவர்

உள்ளுரை

வைகாசி கிருத்திகை மலர்.

உ

"பழநி ஆண்டவர்"

அ றி வி ப் பு.

பழநி ஆண்டவர் சிறப்பு மலர்களுக்கென இரண்டாவது ஆண்டுக்கட்டணம் கொடுத்துள்ள அன்பர்களுக்கு வைகாசி-ஆனி மலருடன்.

பழநித்தல வரலாறு.

படி ஒன்று இத்துடன் அனுப்பியுள்ளது - இன்னும், அடுத்த சிறப்பு மலருடன் வீபூதி உத்திராக்க மகத்துவ விளக்கம் என்ற நூல் ஒன்றும் அனுப்பப்பெறும்.

நமது வெளியீட்டின் இரண்டாம் ஆண்டு சென்ற சுபானு ஐப்பசி மலருடன் ஆரம்பித்திருந்தும் இதனைச் தொடர்ச்சியாகப் பெற்றுவரும் அன்பர்கள் பலர் அதன் ஆண்டுக்கட்டணமாகிய ரூபா இரண்டையும் இன்னும் அனுப்பி வைக்காமலிருக்கின்றனர். பலருக்கு தனியாக நினைப்பூட்டும் அனுப்பியுள்ளது. ஆகவே, அன்பர்கள் தங்கள் ஆண்டுத்தொகையாகிய ரூபா இரண்டையும் அனுப்பி நமது சிறந்த வெளியீட்டை ஆதரிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்,

J M. சோமசுந்தரம்.

பத்திராசிரியர்,

'பழநி ஆண்டவர் காரியாலயம்'
ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம்,
பழநி 17—6—44.

உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

பழநி ஆண்டவர்

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான, திங்கள் வெளியீடு

1944) தாருண வைகாசிக் கிருத்திகை மலர். (மே

பழநித் திருப்புகழ்.

இருகனக மாமேரு வோகளப துங்க
    கடகடின பாடீர வாரமுத கும்ப
    மிணைசொலிள நீரோக ராசலஇ ரண்டு குவடேயோ
இலகுமல ரேவாளி யாகியஅ நங்க
    னணிமகுட மோதான னாமிகவ ளர்ந்த
    இளமுலைமி னார்மோக மாயையில் விழுந்து தணியாமல்
பெருகியொரு காசேகொ டாதவரை யைந்து
    தருவைநிக ரேயாக வேயெதிர்பு கழ்ந்து
    பெரியதமி ழேபாடி நாடொறுமி ரந்து நிலைகாணாப்-
பிணியினக மேயான பாழுடலை நம்பி
    உயிரையவ மாய்நாடி யேயவ நிரம்பு
    பிறவிதனி லேபோக மீளவுமு ழன்று திரிவேனோ;
கருணையுமை மாதேவி காரணிய நந்த
    சயனகளி கூராரி சோதரிபு ரந்த
    கடவுளுடன் வாதாடு காளிமலை மங்கை யருள்பாலா-
கருட னுடன் வீரான கேதனம்வி ளங்கு
    மதிலினெடு மாமாட மேடைகள்து லங்கு
    கலிசைவரு காவேரி சேவகனொடன்பு புரிவோனே!
பரவையிடை யேபாத காசுரர்வி ழுந்து
    கதறியிட வேபாக சாதனனு நெஞ்சு
    பலிதமென வேயேக வேயயிலில் வந்த குமரேசா-
பலமலர்க ளேதூவி யாரணந வின்று
    பரவியிமை யோர்சூழ நாடொறுமி சைந்து
    பழநிமலை மீதோர்ப ராபரனி றைஞ்சு பெருமாளே.

பொழிப்புரை :—

ஓர் அறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர் ஈறாக உள்ள எல்லா உயிர்களிடத்தும் இயல்பாக எழுந்த பெருங்கருணை வடிவமான உமாதேவியும், எண்ணில்லாத சராசரங்களைப் படைத்தருள்வதற்குச் சிறந்த காரணமாக இருப்பவளும், ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடன் மீது துயில்கொள்வதனால், பெரிதும் மகிழ்ச்சியடையும் திருமாலின் தங்கையும் (என்றும் நிலைபெறுக வாழுதற்குதவும் சாவா மூவா மருந்தாகும் அமிழ்தத்தை உண்ணவேண்டி தங்களது அறிவாற்றல்களையே துணையாகக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்த தேவர்கள் கருத்துக்கு மாறாகவும், "ஒன்று நினைக்கின் அது ஒழிந்திட்டு" ஒன்றாதலாகிய உலக இயற்கைக்கு ஏற்பவும், அந்தத் திருப்பாற் கடலிலிருந்து, கண்டாரைக் கொல்லும் கொடிய நஞ்சு தோன்ற, அதனைக்கண்டு ஆற்றாத தேவர்கள் திருக்கைலையிற் சென்று வேண்ட, 'வானவர் உய்யவேண்டி அந்த" அலைகடல்வாய் நஞ்சையுண்டு) தேவர்களைக் காத்தருளிய கடவுளாகிய எமது சிவபெருமானுடன் வாதுசெய்து நடனம் செய்த காளி என்று போற்றப்பெறுபவளும், மலையரசன் பெறுதுபெற்ற பெருந்தவப் புதல்வியுமான உமாதேவியார், (தேவரும் மூவரும் உய்ய,) உலகுக்கு அளித்தருளிய பாலரே! (இளையரே!) கருடனுடைய வடிவம் பொருந்தியதும், பெருமை பெற்றதுமான கொடியானது பரந்து சிறந்து விளங்கும் பெரிய மதில்களுடன் உப்பரிகைகளும், மிக்க அழகுடன் தோன்றும் 'கலிசை' என்னும் நகரத்திற் பிறந்த காவேரிச் சேவகனார் பால் அன்பு புரிந்தருளும் பெருமானே! சூரபன்மனது வீரமகேந்திரபட்டினத்தைச் சூழ்ந்தகடலில் சிட்டாகியேஇருந்திடும் தேவர்களைச்சிறை செய்த பாதகராகிய அசுரர்கள் விழுந்து, கதறுமாறும், தேவர்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரன் தன் மனக் கருத்து முற்றியதெனக் கண்டு வணங்கிப்பேரானந்தமுற்று பரவசமடைந்து துதிக்கும் வண்ணமும், அழகிய பச்சை மயில் மீது எழுந்தருளி வந்து அருள்புரிந்தகுமாக்கடவுளே! கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்ற பலவகை, மலர்களைத் திருவடிக் கமலங்களில் அருச்சித்து, வேத

மந்திரங்களை உச்சரித்து வணங்கி, "எண்ணுதற்கெட்டா எழிலார் கழலிறைஞ்சி" தேவர்கள், நின்னைச் சுற்றி நிற்குமாறு நாடோறும் திருவுளமிசைந்து ஞானமயமான பழநி யங்கிரிமீது, தன்னேடொப்பாரிங்கு யாவருமில்லாத சிவ பெருமானுல், வணங்கித் துதிக்கமிற்குப் பெரியோனே! பொன்மயமான சிறந்த இரண்டு மேருமலைகளோ (பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, புனுகு, சவ்வாது முதலிய நறுமணம் நிறைந்த பொருள்களுடன், வாசனைமிக்க பனிநீர் சேர்ந்ததும் இயல்பாகவே மணமிக்கதுமான சந்தனத்தை அணிந்து, சிறந்த குடத்தை ஒத்து இறுகி கச்சணிந்து அமுதம் நிரம்பிய இரண்டு கலசங்கள்போன்று உயர்வாகப் புகழப்படும் இளநீரோ, யானையின் இரண்டு மத்தகங்களோ, சிறந்து விளங்கும் மலர்களையே, பாணங்களாகவுடைய மன்மதன் அணிந்திருக்கும் பொன் மகுடமோ, என்று காமுகர்கள் கண்டு வியக்கும் வண்ணம், பருத்து வளர்ந்துள்ள இளமைமிக்க தன பாரங்களையுடையவர்களும் மின்னலைப்போன்ற ஒளியுடைய வர்களுமான மாதர்களின்பால் மிகவுண்டாகும் மோகமாகிய மாயையில் அகப்பட்டு, மனம் அமைதியுறுமல், ஆசை அதிகரிக்கப் பெற்றவர்களும், இரப்பவர்களுக்கு ஒருகாசும் கொடாதவர்களுமான உலோப குணமுடையவர்களை, ஐந்து தருக்களுக்குச் சமானமானவர்களென்று அவர்கள் எதிரே சென்று புகழ்ந்து மிகப்பெரிய தமிழ்மொழியினுலே கவி பாடி நாடோறும் அவர்கள்பால் இரந்து, நிலையில்லாததும் தீராத நோய்களுக்கு உறைவிடமாய் இருப்பதும் அழியக் கூடியதுமான (அன்னெறியில், செலுத்திப் பயன் காணுத) தேகத்தையே நிலையான பொருளென்றெண்ணி, மனம் செலுத்த, உயிர் வீணுக, பாவம் நிறைந்த பல பிறப்புக் களிலே மீண்டும் மீண்டும் சேருமாறு உழன்றுயான் மயக்க முற்றுத் திரிதல் தகுதியோ என்பதாம்.

x x x

"நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்." -கந்தரனுபூதி

உ

சிவகுகமயம்.

நக்கீரர் நற்றமிழ். *

திரு ச. தண்டபாணி தேசிகர், திருவாரூர்

செந்தமிழ்ச் சைவப் பெருமக்களே!

பெரியோர்களே! தெய்வக்கலையைச் செழிக்கச் செய்வன திருமுறைகள். அவற்றுள் பதினொராந்திருமுறை கலைமகள் நாளில் இடம் பெற்றது இன்புறக்கூடியது. பதினொராந்திருமுறையில் அடங்கிய நூல்கள் நாற்பது. அவற்றுள் அடியேன் எடுத்துக்கொண்ட நக்கீரர் நற்றமிழ் நான்காவதாக, சேரமான்பாடலுக்கு அடுத்ததாக அமைந்தது. இவ்வாசிரியர் உறுதியை "உம்பரார் பதிபோலகம் முற்றும் நீர் கண்ணுனுனும், மொழிந்த நும் பாடல் குற்றம் குற்றமே" என்ற வீர உரையால் தமிழுலகம் இன்னும் அறிந்துகொண்டே இருக்கிறது. இவர் தமிழாலும், நற்றமிழாலும் தமிழை வளம் பெறுவித்தவர். இவர் தமிழை, இயற்கையின் எழிலையும், அரசர் அருங்குணங்களையும் அறிவிக்கும் சங்கநூல்களிற் காணக்கூடும். நற்றமிழை இந்தத் திருமுறை நூல்களே நன்கு தெரிப்பன. நற்றமிழ் என்பது தெய்வமணக்குந்தமிழ். ஞானசம்பந்தப் பெருமான் தமிழை நற்றமிழ் என்றார்கள். நாவலர் காவலராகியநம்பியாரூரர் - அவ்வாறே வேறு புலவர் ஒருவரும் 'பாண்டியா! நின்னாட்டுடைத்து நல்ல தமிழ் என்றார். ஆகவே "நீலத் திரைக்கடல் ஓரத்திலே நெடுவானம் முத்தமிடுதலைக் கண்டேன்" என்பனபோன்ற பாடல்கள் கவிதை நலம் சொட்டுவன என்று காட்டப்பெற்றாலும் நிலைத்த பொருளின் இயல்பை - அழியாப்பேரின்ப அமைதியை யளிப்பன அல்ல; ஆதலால் இவை தமிழேயன்றி நற்றமிழாகா. நற்றமிழாயின் சிவமணங்கமழவேண்டும். சொல்லும் பொருளும் சிவசத்திகளின் தொடர்பு என்பதை இவ்வாசிரியர் பெருமான் "சொல்லும் பொருளுமாகிய சோதியை" என்று கோபப்பிரசாதத்துக்குறிப்பாராயின. அத்தகைய நற்றமிழ் நூல்கள் பத்து; அவற்றுள், ஒன்பதாவதாகிய திருமுரு

*பழநி திருப்புகழ்மகாநாட்டில் பேசஇருந்தசொற்பொழிவு

காற்றுப்படை திருப்புகழ் பாநாட்டிலே ஆராயப்பெற்றது. ஆகலால் அதனைவிடுத்து ஏனையவற்றை ஒருவாறு நோக்கு வேன். ஆயினும் திருமுருகாற்றுப் படையைப்பற்றிப் பிற்காலத்துச்சீர்திருத்த ஆராய்ச்சியாளர்சிந்தனையொன்றை மட்டும் ஈண்டு ஆராய்தல் சிறந்ததாகலாம். அது என்னை யெனின்; 'பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முதலாவ தாக அமைந்துள்ளது. ஆற்றுப்படுக்கும் முறைகளை எடுத் துக்காட்டவந்த தொல்காப்பியம் "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் எனமுறை கூறுகிறது. ஆதலின் பத்துப்பாட்டினை முறைப்படித் தொகுத்திருந்தார்களாயின் முருகாற்றுப்படையை முதற்கண் வைத்திருக்கமுடியாது. இங்ஙனம்வைத்தது தெய்வப்பித்துக்கொண்டசிலர் செய்கை யாக இருக்கவேண்டும்' என்பது அவ்வாராய்ச்சி. இவ் வாராய்ச்சியில் அடியேனுடைய சிற்றெண்ணம் ஒன்று. திருமுருகாற்றுப்படையில் ஆறுசெல்வார் வீட்டுவகுப்பினர். ஆற்றுப்படுப்பார் வீடடைந்த விழுமியோர். ஆதலால் இவர்கள் பெயர் கூத்தர் முதலிய நாற்பிரிவில் இருக்கிறதா? இல்லையே? அங்ஙனமாக இல்லாத ஒன்றைப் பின்வைத்தா லென்ன? முன்வைத்தாலென்ன? முன்தானிருக்கட்டுமே என்று. அன்றியும் சிறுபயன்விளைக்கும் ஆற்றுப்படைகளைக் காட்டிலும் பேரின்பப்பயனைத்தருவதை பின்வைக்கலாமா? அன்றியும் தொல்காப்பியத்திற் கண்டபடி முறையாகவும் மற்றவை கோக்கப்படவில்லையே மூன்றாவதான பொருநர் இரண்டாவதாக இருக்கின்றார்களே. ஆகையால் பத்துப் பாட்டுத்தொகுத்தவர்கள் தெய்வம்பற்றியது என்ற ஒரு சிறப்பு மட்டும் பற்றித்தொகுத்தார்கள் அல்லர். முருகனி டம் செல்வான் எய்தும் பயனாக "மணங்கமழ் தெய்வத்திள நலங்காட்டி விளிவின்றுத்தோன்ற விழுமிய பரிசில் நல்கும்" எனப்பகரப்பெறும் பெரும்பயன் கருதியும் முன் வைத்தார் கள் என்பதே எனது சிறு விண்ணப்பமாக அறிவுடைப் பேரவையின் ஆய்வுக்காக விடுகின்றேன். இது நிற்க.

இவர் நற்றமிழில், முதலாவது கைலைபாதி காளத்தி பாதியந்தாதி. இவ்வாசிரியருக்குக் கயிலையும் காளத்தியும் ஒன்றாகவும், வேறுனநிலையில் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தாகவும் காட்சிதந்துநிற்கும். இந்நூலுள் ஒன்றை விட்டு

ஒரு செய்யுளாகக் கைலை, காளத்திகளை யறிவிக்கும் வெண்பாக்கள் நோக்கப் பெற்றுள்ளன. போற்றித் திருக்கலி வெண்பாவினும் "மண்ணின்மேல், காளத்தி போற்றிக் கயிலைமலை போற்றியென, நீளத்தினால் நினைந்து நிற்பார்கள்" எனக்கூறுவதும் இக்கருத்தை வலியுறுப்பதாகும்.

இந்நூல் முதற்பாடல்; ஒரு வெண்பா விளக்கு எற்றுகிறது - நக்கீரர் நாக்கு நல்ல அகல்; அதில், சொல்லாகிய திரியையிட்டுப் பொருளாகிய நெய்யை வார்த்து வெண்பா என்ற விளக்கை ஏற்றுகிறது. அவ்விளக்கில் சிவஒளி திகழ்கின்றது. இங்ஙனமே இந்நூலின் நூறுபாடல்களுமே அருள்விளக்கம் அளிப்பன. அவற்றுள் அடியேன் மனங் கரைத்த பாடல் ஒன்றும், மந்திரப் பெருமைகாட்டும் பாடல்கள் மூன்றும் காட்டி ஒருவாறு இந்நூலைப்பற்றிய பேச்சை முடிப்பேன்.

பெரியோர்கள் சிந்தனைமுழுதும் பிறவி ஒழிப்பதிலேயே. அங்ஙனமிருந்தும் பிறவியை விரும்புவார் ஒரு சிலரே யாவர். அங்ஙனமே இவ்வாசிரியரும் உலகின்மேல் வைத்து இன்னும் பிறவிவேண்டும். ஆனால் 'காளத்திமலையை வணங்க வல்லராயின்' என்கிறார்கள். இப்பாடல் "மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்ற அப்பர் அடிகள் திருவிருத்தத்தை நினைவிற்குக் கொண்டுவந்து உள்ள முருக்குவதாகும். அஞ்செழுத்தின் பெருமையை,

"விளையும் வினையரவின் வெய்ய விடத்தைக்
களைமினே காளத்தி யாள்வார்—வளைவில்
திருந்திய சிரீசன் திருநாமம்

என்னும்மருந்தினை நீர்,வாயிலே வைத்து

என்னும்அருட்பாடல் அறிவிப்பதைஆழ்ந்துநோக்குவோம் இதில்வினையாகிறவிடம் துன்பந்தருகிறது. அதனைப்போக்க வேண்டும். அதற்கு ஆரணமாகிய அஞ்செழுத்து அருமருந்தை வாயிலே வைத்தாற்போதும் என்கிறார்கள். விளையும் வினைவிடம் என்பது ஒரு சிறந்த பகுதி. உலகிலுள்ள ஊரும் பாம்பின்விடம் உற்றவுடன் உயிரைப் பிரிக்குமேயன்றிப் பெருகிக்கொண்டே போகாது. உற்ற

உடலைப்பற்றி நிற்குமேயன்றி உறும் உடலையும்பற்றி வருத்தாது. இந்த வினையரவின் விடமோ நுகர்ச்சிப் பய னுய்க்கழிந்தலேயன்றி மேலைக்கு வித்துமாக விளையும். ஆதலின் விளையும் வினையரவின்விடம் என்ற சிறப்பு உணர இன்பந்தருவது; அடுத்தது மருந்தின் உயர்வு. மருந்து களில் இடுமருந்தும் உண்மருந்தும் ஆகிய இரண்டு உண்டு. இரண்டும் இட்டும் உண்டும் இரத்தத்தொடு கலந்த பின்பே கருதிய பயனைத்தரும் - இம்மந்திர மருந்தோ வாயில் வைத்த உடனே கருதிய பயனைத் தந்துவிடும். ஆதலால் வாயிலேவைத்து விடத்தைக்களைமின்' என்றார்கள். அடுத்த பாடலில்; மருந்தென்றால் மக்கள் மகிழ்ந்துண்பது வழக்க மில்லை. சுவை எப்படியிருந்தாலும். ஆதலால் மக்கள் உள நிலையறிந்த இவ்வாசிரியர் மந்திரத்தை வாயில் வைத்துச் சொல்லுங்கள். அது உடனே மருந்தாகி நோய்தீர்க்கும் என்றருளிய பகுதி "வாயிலே வைக்குமளவில் மருந்தாகித், தீய பிறவிநோய் தீர்க்குமே" என்பது. அடுத்த செய்யுள், யாருங்காணமுடியாத தூரத்திலுள்ள காளத்தி நாதனை மிக அண்மையில் வைப்பது அஞ்செழுத்து என்று அதன்பயனை அறிவிக்கின்றார்கள். அங்ஙனமே முடிந்தமுடிபாக இறுதிச் செய்யுளில், பல வார்த்தை எதற்கு? இடைவிடாமல் அஞ்செழுத்தை ஓது என்று நெஞ்சிற்கு ஓதுகின்றார்கள்.

அச்செய்யுள் :—

"மற்றும்பல பிதற்றவேண்டா மடநெஞ்சே!
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆராவமுதின் திருநாமம் அஞ்செழுத்துஞ்
சோராமல் எப்பொழுதும் சொல்" என்பது. அவற்றுள்

சோராமல் சொல் என்பது "நான்மறக்கினும் சொல்லுநா" என்பதுபோலச் சொலல் என்ற கருத்தையும் காட்டி நிற்கும். இவ்வாறே,

"இருந்தவா காணீர் இதுஎன்ன மாயம்
அருந்தண் கயிலாயத் தண்ணல்—வருந்திப்போய்த்
தான்நாளும் பிச்சை புகும்போலும் தன்னடியார்
வானுள மன்னுள வைத்து" என்ற திருப்பாடலும்

நகைச் சுவையோடு அடியார்க்கருளும் எளிவந்த கருணைச்

சுவையும் காட்டி "அடியாரிருக்க ஐயங்கொள்வதழகிதே!" என்ற சுந்தரர்வாக்கை ஒருபுடை ஒத்துமகிழ்வளிக்கின்றது.

இண்டாவது நற்றமிழ், திருவீங்கோய் மலை எழுபது; ஈங்கோய்மலை என்னும் இத்தலம் இப்போது சிவிங்கிமலை யெனத்திரிந்து வழங்குகிறது. இந்நூல்இறைவன்மாட்சியை விளக்குவதோடு மலைவாழ் மக்களின் மாண்புகளையும் உயிர்களின் பண்புகளையும், விலங்கினங்களின் பகுத்தறிவற்ற செய்கைகளையும், குறவர்களுக்கும் சிற்சில காலத்துத் தோன்றும்கருணைக்காட்சியையும்அறிவித்துச்செல்கின்றது.

"அரிகரியைக் கண்டவிடத்தச் சலிப்பாயோட
பிரிவரிய தன்பிடியைப் பேணி—கரிபெரிதும்
கையெடுத்து நீட்டிக் கதஞ்சிறக்கும் ஈங்கோயே
மையடுத்த கண்டன்மலை."

இச் செய்யுளில் சிங்கம் யானையைக் கண்டு அச்சுறுத்த ஓடுகிறது. களிறோ பெண் யானையைப் பாதுகாக்கத் தன் கையைத்தூக்கிக் கோபம் மிகுகின்றது. இதில் யானைகள் கோபம் மிகின் கையைத்தூக்கிப் பிளிறுதலாகிய இயற்கை எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது,

இறைவன் மலையில் கொலை புரியும் விலங்கினங்கூடக் கொடுந் தன்மை யொழிந்து சிவ பூசை பண்ணுகின்றன என்பதை விளக்குவது"அரியும்உழுவையும்" என்ற பாடல். இதில் ஒருநயம் உள்ளம் உருக்குவது. 'ஈங்கோய் கூற்றம் திரியாமல் செற்றான் சிலம்பாதலின் புலி முதலியவைகளும் பூசை புரிகின்ற என்ற சிறப்பு தெரிக்கப் பெற்றுள்ளது. வேடச்சிறுவர்கள் பன்றியுழுத உழுகுழியில் தோன்றும் மணிகளை நெருப்பென்று தினைக் கதிர் வாட்டுகின்றார்கள் என்பதும், இலவம் பூவை எரிகொள்ளியென்று எண்ணி ஆண் குரங்கு மூங்கிற்றழைகொண்டு வீசுகின்றது என்பதும், இளமையாலும், பகுப்புணர்ச்சியில்லாமையாலும் வந்த செய்கைகளை விளக்கும் செய்யுட்களாம்.

மற்றொரு நிகழ்ச்சி:- கல்லாக் குரங்கு பளிங்கில் கனியைக் காட்டுகிறது. எல்லாக் குரங்குகளும் ஒன்று சேர்ந்து உள்ளிருக்கும் கனியை எடுக்க முயல்கின்றன. என்ற கருத்துடைய செய்யுளும் அழகியவற்றுள் ஒன்று.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

பழநி திருப்புகழ் மகாநாடு, சைவசித்தாந்த சபை
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா,
பன்னிரு திருமுறை திருப்புகழ் விழா, கலைமகள் விழா
குகனடியார் குழாம்.

தாருண ஸு சித்திரை மீ 29, 30, 31 - வைகாசி மீ 1, 2, 3உ.
மே-மீ 11, 12, 13, 14, 15, 16, 1944

திருப்புகழ் மகாநாடு.

முதல்நாள் நிகழ்ச்சி. **11—5—44**

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு."

செந்தமிழ்ப்பரமாசிரியராகிய திருமுருகப்பெருமானது ஆறுபடைவீட்டுத் திருத்தலங்களுள்ளே சிறப்புற்று விளங்கும் "திருவாவினன்குடி" என்ற பழநியம்பதியிலே திருமுருகப்பெருமானது திருவருளைத் துணையாகக்கொண்டு அடிவாரம் அருட்சோதி வீதியிலேயுள்ள ஸ்ரீ சண்முகத் திருவருள்கணபதிஇராமலிங்க நிலயத்தை நிறுவியவர்களும், நமது பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி சுவாமியின் திருவடிக்கமலங்களிலே மறவாத பேரன்பு பூண்டுள்ளவர்களும், நமது பழநிதேவஸ்தானம் ஆலோசனைக்கமிட்டி அங்கத்தினராக விளங்குபவர்களுமான ஈரோடு திருவாளர், வ. வே. கா. ரா. முருகேச முதலியார் அவர்கள், ஷை தேவஸ்தானம் நிர்வாக அதிகாரியும், இப்பழநியம் பதியிலே செந்தமிழ் மொழியையும், சைவசித்தாந்தத்தையும் என்றும் குன்றா ஊக்கத்துடன் வளர்த்துவருபவர்களுமான திருவாளர், ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் முதலிய மெய்யன்பர்களுடையபெருமுயற்சியினாலே "குன்றமெறிந்த குமாரவேள்" தலைவராயமர்ந்து தமிழையாராய்ந்த "இடைச் சங்கமோ" என்று எண்ணி அன்பர் மனங்களி சிறப்பப் புலவர் மனங்குதுகலிப்ப, எல்லா மக்களும் இந்த ஆறு நாட்களிலும் கேள்விச்செல்வம் வாயிலாக நமக்கு வாய்த்

துள்ள அரியபெரிய வாய்ப்பானது (வெயில் வெப்பமிக்க இந்நாளிலே அமைந்தது வையகம்யாண்டும் சூழ்ந்துநிற்கும் துயர்தீருதற்பொருட்டு, பாருக்குள்ளே கலியுகத்திலே கண் கண்ட பரம தெய்வமாகவிளங்கும் நமது முருகப்பெருமான் வழங்கியதொரு "அறுமுகக்கருணை" எனப்படும் அருட் பிரசாதமோ என்று போற்றிப் பரவுதற்குரியதாக விருந் தது சிறப்பாகக் குறித்தற்பாலது.

சைவசித்தாந்தச் செந்நெறியை வையகமெங்கும் பரப்ப வேண்டுமென்று, பெருநோக்கத்திலே ஈடுபட்டுப் பலநாட்க ளாக நமது பெருமானது திருமலைமீது தவஞ்செய்தலாகிய தங்கருமம் செய்தவரும் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதினம் திருச்சி மௌன மடாலயம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளின் விருப்பப்படி, சிதம்பரம், திருவெண்ணைநல்லூர், திருத்துறை யூர், முதலிய திருத்தலவழிபாட்டுக்கென்று ஆங்காங்கே பொருள்களை அனுப்புவிக்க, அதன்படியே அங்கங்கே வழி பாடாற்றிய விபூதி பிரசாதங்களும் வந்து சேர்ந்தன.

பல பாகங்களிலிருந்தும் சொற்பொழிவு கேட்டலில் பெருவிருப்புடைய மேதக்கார் பலரும் சொற்பொழிவாளர் களிற் சிலருமாக, முதல்நாளே வந்து கூடினர். சித்திரைமீ 29உ வியாழக்கிழமை வைகறையிலே, எல்லா அன்பர் களும் எழுந்து நீராடி,நியமங்களை முடித்துக்கொண்டு, பெரு வுடையார் கோயில், பெரிய நாயகி அம்மன் கோயில், திருவாவினன்குடி திருமுருகப் பெருமான் சந்நிதி, பழநி யங்கிரி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி சுவாமி சந்நிதிமுதலிய திவ்ய ஸ்தலங்களிற் சென்று "சைவமுந் தமிழுந் தழைத் தினி தோங்குமாறு" மெய்வழிபாடு செய்து போற்றிப் பரவி வந்தனர். அக்கினி நக்ஷத்திரத் திரு நாளிலே வந்து கிரிவலம் செய்து பெருமானைப் பரவுந் தொண்டர் குழாங் களும் பல பாகங்களினுமிருந்து வந்து திரளாகக் கூடினர். திருப்புகழ் மகாநாட்டிலே தல் நாள் தலைமை தாங்குதற் கென்று இங்கே எழுந்தருளியிருந்தவர்களும், பழநி ஆண்டவர் திருவடித் தவமுயன்று அப் பரமன் அருளைப் பெற்றவர்களும், இப்போது வள்ளிமலையில் தவம்புரிவதனுல்

"ஸ்ரீ வள்ளிமலை சுவாமி" என்று திக்கெலாம் பரவுமேதக்காரும், தூய உள்ளமும் பரந்த கருணையும் உடையவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த அடிகளாரை, ஸ்ரீ சண்முகத் திருவருள் கணபதி இராமலிங்க நிலயத்திலே, இப்பெரு விழாவுக்கென்று அமைந்ததும், வாழை கமுகு முதலியவைகளால் அலங்கரிக்கப்பெற்று நீதிமொழிகள், சமயப்பொன்மொழிகள் விளங்கப்பெற்றதுமான மிக்க அழகிய கொட்டகைக்கு அழைத்துவர ஆசனத்தமர்ந்தனர்; கோவை, திரு, A. N. மருதாசலஞ் செட்டியார் அவர்கள் இறைவனை வேண்டி, மகாநாட்டைத் திறந்து வைத்தனர்; திருவாளர் வ. வே.கா ரா. முருகேசமுதலியாரவர்கள் மகாநாட்டினரை அன்புடன் வரவேற்று, தலைவரைப் பிரேரேபிக்க, ஸ்ரீலஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் திரு. ஈசான சிவாசாரியர், திரு. N. தண்டபாணிப் பிள்ளை அவர்கள் முதலியோர் முன் மொழிதல், வழிமொழிதல், பின் மொழிதல்கள் நிகழ்த்த, அடிகளார் தலைமை வகித்தனர். சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலை தேவார ஆசிரியர், திரு.சுப்பிரமணிய முதலியாரவர்களாலும், பழநி தேவஸ்தானம் திருப்புகழ் கோஷ்டியாராலும் திருமுறைகள் ஓதப்பெற்றன. அடியார்களுக்கு திரு. வ.வே.கா.ரா. முருகேசமுதலியார் அவர்கள் வரவேற்புப்பா வாசித்தளித்தனர். (இது இணைத்துள்ளது காண்க.)

தலைவர் அடிகளார், ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரிதத்தை சுவாமிகள் அருளிச்செய்த திருப்புகழ் முதலிய அருள் நூல்களையே ஆதாரமாகக்கொண்டு இனிய திருப்புகழ்ப்பாக்களை அடிகளாரோடுவந்திருந்த அடிகளார் மாணவிகளான, பர்வதவல்லி,சந்த்ரா,புஷ்ப்பா முதலியோர் தங்களுடைய இனிய குரலிலே இன்னிசைக் கருவிகளோடு பொருந்தும் வண்ணம் கேட்போர் களிசிறப்பப் பாடி மகிழ்விக்க சுவாமிகள் தலைமையுரையை முற்றுவித்தார்கள்.

பின்னர் மகாநாட்டின் நிகழ்ச்சி முறைப்படி, முதலாவதாக மோகனூர் திருவாளர் முத்துச்சாமி பிள்ளை அவர்கள் 'திருப்புகழ்' என்ற செழும்பொருளைமேற்கொண்டு செவ்வே

விரிவுரையாற்றினர்கள். பின்பு, நாகர்கோவில் தொண்டர் குழாம் தலைவர், பண்டிதபூஷணம் திரு. K. ஆறுமுகம்பிள்ளை அவர்கள், 'ஆறுமுகனும் ஏறுமுகனும்' என்றதலைப்பிலே, சைவத்தின் தனிச்சிறப்பையும், இறைவனது அருவ, அருவுருவ, உருவ இயல்பையும், முருகன் தனிமுதற்றன்மையையும், தவத்தால் அதனையுணர்ந்த சிங்கமுகன் தன்மையையும் விளங்கவுரைத்துக் "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" வன்மையினாலே எல்லோரையும் மகிழ்வித்தனர். தலைவர்கள் முடிப்புரையுடனும், தேவார ஓதுதலுடனும் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி. **12—5—44**

தலைவர், சிவத்திரு. ஈசான சிவாசாரியர் அவர்கள்.

திருமுறைகள், திருப்புகழ் ஓதலுடன் மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. இந்நாளினும், காலைநிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகளே தலைமைதாங்கினர். முதலாவதாக, திருவாளர் பண்டிதபூஷணம் K. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் "பெரிய புராணம் பழிப்பு ஒழிப்பு" என்ற பொருளை மேற்கொண்டு, தெய்வச்சைவத் திருமுறைகள் பன்னிரெண்டும் சைவ சமயத்துக்கும் சைவ சமயிகளுக்கும் பேராதாரமாகவுள்ள அருள் நூல்களென்றும், சைவ சமயத்திற் பேசப்படுந்தவ நெறியாகிய, சரியை, கிரியா, யோகமெனப்படும் அருநெறியிற்சென்று சிவஞானானந்தமெனப்படும் அநுபவநிலையினின்ற திருவருட்பெருஞ்செல்வர்களின் தொண்டின் நிலையை அத்துணைக்கண்கொண்டு காண்பவர்க் கல்லது அந்தந்த அருட் பெரியார்கள் வரலாற்றுண்மை விளங்கமாட்டதென்றும், அந்நெறிபற்றி யுண்மையுணராதார் கூறும் மயக்கவுரைகளெல்லாம் அறிஞர் உலகத்துக்கு ஒவ்வாதனவென்றும், அதனால் அவர்களது பழிப்பு ஒழிக்கப்பட்டனவென்றும் பலவகை உதாரணங்களோடும் தெள்ளத்தெளிய விரிவுரை யாற்றினர்கள். இரண்டாவதாக,

திருப்புகழடிமை, திரு. ரா. முருகேசம் பிள்ளை அவர்கள், சென்னை, இஞ்சினியரிங் காலேஜ், திருப்புகழ் பஞ்சபூத ஸ்தலங்கள் என்று போற்றப்படும் சிவதல வரலாற்றையும், அதற்கேற்ப அமைந்துள்ள சுப்பிரமணிய

ஸ்தலங்களின் தத்துவக் கருத்தையும் அவ்விரண்டினது ஒருமைப்பாட்டையும் மிக்க ஆராய்ச்சித்திறன் விளங்க வுரைத்தார்கள்.

மூன்ருவதாக, திரு. அடிகளார் (தலைவர்) திருவகுப்புக் கள் பற்றிச்சிறந்த சொற்பொழிவாற்றி, பல திருப்பாடல் களைத் தமது மாணவிகளுடன் ஓதி மகிழ்வித்தார்கள் முடிப்புரையுங் கூறினர்கள்.

பிற்பகல் சபைகூடப்பெற்றது. பழநி, வேதசிவாகம பாடசாலைத்தலைமை ஆசிரியரும், தருமபுர ஆதீன 'சைவ சித்தாந்த சரபமு'மாகிய சிவத்திரு, ஈசான சிவாசாரியா ரவர்களைத் தலைமைதாங்குமாறு திருவாளர் முதலியார் அவர் கள் வேண்டினர். சிவத்திரு சிவாசாரியர் அவர்கள் தலைமை தாங்கி முன்னுரை கூறுமுகத்தான், சைவசமயத்தின் தனிச் சிறப்பையும், சமயாசாரியர், சந்தானசாரியர், அருணகிரி நாதர் முதலிய திருவருட் பெரியார் நிலையையும், அவர்கள் அருளிச்செய்த அருள்நூல் மாட்சியையும், அவ்வருட் பநுவல்களைக்கற்றல் கேட்டலில் வல்ல தக்கார் வாயிலாகச் சிந்தித்தலினல் வரும்பேற்றையும் அதற்கென்று தோன்றிய இந்தத்தொண்டர் குழாத்தின் தனிச்சிறப்பையும் விளங்க வுரைத்தனர். பின்னர் நிகழ்ச்சி முறையில்,

முதலாவதாக, பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகள் அடிமை, திரு.சேலம்.த.இராமலிங்கம்பிள்ளைபி.ஏ.,அவர்கள், ஆசிரியர், தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளி சென்னை, "திருப்புகழ் ஆராய்ச்சி" என்ற பெரும் பொருள்பற்றித் திருப் புகழ் நலன்களெல்லாம் சிறக்கப்பல அருங்கருத்துக்களை விளக்கஞ் செய்தார்கள். இரண்டாவதாக ஸ்ரீ குகமண்டலி ஸ்தாபகர் சிவத்திரு N. சுப்பிரமணிய ஐயரவர்கள் - சுப்பிர மணிய தத்துவம் என்னும் பொருள்பற்றி, திருப்புகழ் மஹாஸ்காந்த முதலிய பெருநூல்களிலிருந்து பலமேற் கோள்களை எடுத்துக்காட்டி, மிகவிளக்கமாகச் சொற்பொழி வாற்றினர்கள். மூன்ருவதாக - திருவையாறு, அரசர் கல்லூரித்தலைமை ஆசிரியர், தருமை ஆதீன வித்வான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் - கந்தர் கலிவெண்பா கந்தர் அந்தாதி என்ற பொருள்பற்றிப் பேசத்தொடங்கி,

குமரகுருபர சுவாமிகள் வரலாற்றையும், கந்தர் கலிவெண் பாப்பொருள் நயங்களையும், கந்தரந்தாதிப் பொருள்களையும் கேட்போர் கருத்தில் பதியும்வண்ணம் சொற்பொழிவாற்றினார்கள். நான்காவதாக சிவகுகத்திரு. கிருபானந்தவாரியவர்கள் "சிவனார் மனங் குளிர" என்ற திருப்புகழை ஆதாரவாகக்கொண்டு, சீவன் முத்த சிவஞானிகள் இலக்கணங்களையும், அவதார புருஷர்களின் இலக்கணங்களையும் எடுத்துவிளக்கி, குருசிஷ்ய இலக்ஷணம், உபதேசக்கிரமம், முருகன் - அயனைச்சிறைசெய்தமை, சிறைநீக்கினமை, குகப்பெருமானிடத்தில் சிவபெருமான் உபதேசம் பெற்றமை முதலிய சிறந்தபொருள்பற்றிக்கேட்போர் எல்லோருடைய மனதிலும் பொருள்கள் நன்கு பதியுமாறு இனிமையாகச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர்முடிவுரை மிக பொருள் படப்பேசி எல்லோரையும் மகிழ்வுறச் செய்தார்கள்.

மூன்றாவதுநாள் நிகழ்ச்சி. 13—5—44.

தலைவர், காங்கேயநல்லூர், திருப்புகழமிர்தம் ஆசிரியர் குகத்திரு. கிருபானந்தவாரியவர்கள்.

திருப்புகழ், பாராயணம் தொடங்கப்பெற்றது. மகாநாட்டு அமைச்சர், திரு. முதலியாரவர்கள், திரு. கிருபானந்தவாரியவர்களை தலைமை வகிக்குமாறு வேண்ட, அவர்கள் தலைமை தாங்கி சிறப்பாக முன்னுரையாற்றினார்கள். வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது. (இணைப்பில் காண்க). பின்பு, திரிசிரபுரம் தமிழாசிரியர், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள், 'திருப்புகழும் சைவ சித்தாந்தமும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். அடுத்தபடியாக தருமபுர ஆதீனம், திருச்சி, மௌனமட அதிபர் ஸ்ரீலஸ்ரீ மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் "சும்மா இரு" என்னும் பொருள்பற்றி சைவ சித்தாந்த நுண்பொருள்களைமிகத் தெளிவாக எடுத்துக்காட்டி, மிக்க அருமையாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

பிற்பகல் சபை நிகழ்ச்சி.

முதலாவதாகதலைவரவர்கள், திருப்புகழின்நயங்களையும் அலங்காரம் அனுபூதி முதலியவைகளின் சொல்நயங்களையும் மிகஅழகாக எடுத்துக்கூறினார்கள். பின்புதஞ்சை, அறிஞர் திரு. மு. சாமி. சிவராமபிள்ளை அவர்கள்முருகன், குமரன், குகன்

பழநி சைவ சித்தாந்த சபை.

(நிறுவியது 7—9—1940).





"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

மூன்றாவது ஆண்டு நிறைவு விழா. 14—5—1944.

தலைவர் - திரு. சர். பி. இராமநாதன் கல்லூரித் தலைவர்.
திருவாளர், சு நடேச பிள்ளை அவர்கள்
பி. ஏ., பி. எல்., எம். எஸ். ஸி. (இலங்கை.)

முதலாவதாக திருமுறை ஓதப்பெற்றது. தலைவரைப் பிரேரேபிக்க, தலைமை ஏற்றனர்; வரவேற்புத்தாள் திரு. V.V.C.R. முருகேசமுதலியார் அவர்கள் படித்துஅளித்தனர். (இணைப்பில் காண்க). தலைவர் அவர்கள் சைவசமயத்தின் உயர் தனிச் சிறப்பையும் ஏனைய உலோகாயத முதலிய சமயங்களின் இயல்பையும். இப்போது மக்கள் எல்லோரும் பலப்பல சமயங்களைச் சார்ந்தவராயிருப்பினும் உலோகாயதர்களைப் போலக்காட்சிப் பொருளையே நம்புகின்றவர்களாய்

என்னும் பொருள்பற்றி அன்பு ததும்ப மெய்யுணர்வுடன் விரிவுரை செய்தார்கள். பின்பு வள்ளிமலை சிவத்திரு, திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் "மனதுக் அறிவுக்கும்தர்க்கம்" என்றபொருளுடன் வள்ளியம்மைதிருமணம் என்னும் பொருள்கள்பற்றி தமது மாணவிகளுடன் இன்னிசையோடு சொற்பொழிவாற்றினார்கள். இன்னிசை அரங்கு சென்னை,இசைவள்ளல்திரு. C.சங்கரலிங்கம்பிள்ளை அவர்களால் நடைபெற்றது. தலைவர் முடிவுரைக்குப் பின்னர் வந்தனோபசாரம் கூறப்பட்டது இம்மூன்று நாட்களுடன் திருப்புகழ் மகாநாடு நிறைவுற்றது.

உடலோம்புதலிலேயே பெரிதும் கவனஞ் செலுத்துபவர்களாய்க் காலங்கழிக்கின்றார்களென்றும், சைவசமய உண்மைகள் சமய ஒழுக்கத்தினாலேமட்டும் உணரத் தக்கதென்றும், தமிழ்மறையின் இனிமையும் சைவசித்தாந்த சாத்திரங்களின் தொன்மையும் நன்மையும் உள்ளங்குழைந்து போற்றிக் கொள்ளுந்தரத்தனவென்றும் மிக ஆழமான செஞ்சொற் சிறப்புடன் அருளொழுகு நெஞ்சினராய்க் கேட்போரையும் மகிழ்வித்துச் சொற்பொழிவாற்றினார்கள். நிகழ்ச்சி முறையில் முதலாவதாக, சிவத்திரு, ஈசான சிவாசாரியாவர்கள் "சிவஞான போதம்" என்ற தலைப்பின்கீழ் சிவஞான போத ஞான நூற் கல்வியே சிறந்த கல்வியென்றும், அந்த ஞான நூற் கேள்வியே பிறவி வெப்பத்தைமட்டுமல்லால் இஞ்ஞான்று உலகெங்கணும் சூழ்ந்துள்ள காலத்தாற் பொருந்திய பல்வகைத் துன்பச் சூழலிலிருந்தும் நீக்கி உய்தி தருவதென்றும், சைவசமயத்தின் சிறப்பியல்புகளாகிய "பதி, பசு, பாசம்" என்னும் முப்பொருள்களின் அநாதி நித்தத்தன்மை (அதாவது முப்பொருள்களும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியதல்ல; தோற்ற நாசமில்லாதது; என்றுமுள்ளது என்பன தெரித்துணர்த்துதல்), ஆணவமலத்தின் இயல்பு; கன்ம மலத்தின் இலக்கணம்; பஞ்ச கிருத்திய இலக்கணம்; இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்றலால் உலகெலாமாகி நிற்குந்தன்மையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முத்திறத்தினாலே ஆன்மாக்கள் அறிந்தும் அறியாமலும் ஈடுபட்டுப் பொதுச் சிறப்புச் சிவபுண்ணியங்களான் மல முதிர்ந்த மலபரிபாகம் சத்திநிபாதம் இருவினையொத்த போது இறைவன் குரு வடிவத்தில் வந்து அருள்புரிதல் ஞானத்தினையுணரு முறைமை, பாசநீக்கம், சிவப்பேறு என்ற இரண்டு சிறந்த பயன்கள், சீவன் முத்த சிவஞானிகளின் இலக்கண முதலிய பகுப்பான் விரிப்பனவற்றை விரித்தும் சுருக்கியும் தொகுத்தும் விரிவுரையாற்றினார்கள். இரண்டாவதாக, அம்பாசமுத்திரம் சிவத்திரு. இராமசுவாமி சாஸ்திரியார் அவர்கள் சைவசித்தாந்தத்தின் உயர் நலன்களையும் சிவபெருமானது கருணைத் திறத்தையும் வேத முதலிய நூல்களிலிருந்தும் பெரிய புராணம் திருப்புகழ் கந்தாலங்கார முதலிய நூல்களிலிருந்தும் மிகுந்த ஆர்வத்

துடன் எடுத்துக்கூறி மகிழ்வித்தார்கள்; மூன்றாவதாக, உத்தர மேரூர் ஆசிரியர், திரு. ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை அவர்கள் "சிவஞான சித்தியார" என்ற செம்பொருள்பற்றிச் சிறந்த இலக்கிய, இலக்கண, தருக்கநூல் நெறி பிறழாமல் பலவேத, உபநிடதப் பிரமாணங்களுடன் மிகுந்த பொருள் நுணுக்கங்கள் சிறக்கச் சொற்பொழிவாற்றினார்கள். நான்காவதாக, செங்கற்பட்டு சிவத்திரு. K.M. வேங்கடராம அய்யர் M. A. அவர்கள் 'பஞ்சாக்கரப் பதிகங்கள்" என்ற தலைப்பிலே பலசிறந்த பிரமாணங்களுடன் அஞ்செழுத் துண்மையெல்லாம் இனிது விளங்கப் பசுமரத்தாணி அறைந்தாற்போலக்கேட்போருள்ளத்தில் பதிய வைத்தார்கள். ஐந்தாவதாக, திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் "அன்பின் முதிர்ச்சி" என்பதைப் பொருளாகக்கொண்டு மெய்யன்பின் திறமெலாம் ஒருங்கு காணப்படும் பெரிய புராணத்திலிருந்து பல பிரமாணங்களுடன் அன்பின் நலம் சிறக்கச் சொற்பொழிவு செய்தார்கள்; பின்பு பல இன்றியமையாத கீழ் குறிப்பிட்ட தீர்மானங்கள்கொண்டுவர, பல அன்பர்கள் ஆதரவில் சபையாரால் அங்கீகாரமாயிற்று.

(1) சைவத் திருக்கோயில்களில் வருவாய்க்கேற்பப் பன்னிரு திருமுறைகளையும், ஆண்டுக்கு இருமுறை, முறையே ஓதுவாமூர்த்திகளை நியமித்து, ஓதச்செய்து, திருவிழா நாட்களிலே திருமுறைத்திருவிழா நடாத்துவித்தல் வேண்டுமென்பது.

(2) திருக்கோயில்களில், அகத்தொண்டு பூண்டொழுகும் ஆதிசைவ வித்தியார்த்திகள் தமிழில் இலக்கிய இலக்கணக்கல்வி, சமயக்கல்வி, வேதம், காவ்யம், சிவாகம ஞானபாதக்கிரியாபாத நூற்பயிற்சி, தேவார முதலிய திருமுறைப்பயிற்சி சைவ சித்தாந்த நூற்பயிற்சி முதலியன பெற்றுத் திருக்கோயில் வழிபாட்டைச் சீர்பெறச்செய்தற்குரிய வகையில் வருவாய்மிக்க திருக்கோயில்களின்சார்பாக, ஆங்காங்கே வேதசிவாகம பாடசாலைகளை நிறுவவேண்டுமென்பது.

22-வது பக்கம் பார்க்க..

உ

சிவகுகபயம்.



திருமுறைத் திருப்புகழ் விழா

ஐந்தாவது நாள் நிகழ்ச்சி.

15—5—44

தலைவர், சென்னை இந்துமத அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தலைவர், திருவாளர் திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் M A., B. L.,

முதலாவதாகத் திருமுறை ஓதப்பெற்றன. தலைவர் அவர்களைப் பிரேரேபித்த பின்பு, தலைவர் தமது பதவியை யேற்றனர்; வரவேற்புத்தாள், திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்களால் படித்தளிக்கப் பெற்றது. தலைவர் அவர்கள் சமய நலன்களையும் வேதாகமங்களின் சிறப்பையும் தமிழிலேயுள்ள தெய்வச் சைவத் திருமுறை பன்னிரண்டின் பெருமையினையும், சிறப்பாகப் பெரிய புராணத்திலே தமக்குள்ள பேரார்வத்தையும், எல்லாக் கலாசாலைகளிலும் திருமுறைகளைப் பாடமாக அமைத்துக் கற்பிக்க வேண்டியதற்குள்ள முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் எடுத்து விளக்கிச்சிறந்த கருத்துகளமைந்த முன்னுரையை மிகுந்த அன்போடு வழங்கினார்கள்;

பின்பு, சென்னை திருவாளர், க. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் “ திருஞானசம்பந்தர் தேவாரம் ” சிறிய பெருந்தகையார் என்ற பொருள்களை மேற்கொண்டு

மிகச் சிறந்த ஆராச்சி முறையில் சைவ நலன்களெல்லாம் சிறக்கச் செவ்வே சொற்பொழிவாற்றினார்கள்; பின்னர் திரு. திருவையாறு கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் "திருநாவுக்கரசர் தேவாரம்" என்ற பொருள் பற்றிச் செவ்வே ஆராய்ச்சி செய்தார்கள்; நாகை வித்துவான் திரு. M. சண்முக தேசிகரவர்கள் "திருத்தொண்டின் நெறி" "சுந்தரர் தேவாரம்" என்பன பற்றிப் பேருரை வழங்கினார்கள். சென்னை, திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள், திருவாசகமென்னும் அரும்பொருள்பற்றி, மணிவாசகப் பிரானார் அன்புகனிந்த திருவுளப் பாங்கை எல்லோருமறிந்து இன்புறும் வண்ணம் இனிமையாக விரிவுரையாற்றினார்கள். பாலூர் திரு. P. D. கண்ணப்ப முதலியார் அவர்கள் திருவிசைப்பா திருப்பல்லாண்டெனும் ஒன்பதாந் திருமுறையை அன்புகனியப் பேசினார்கள். சைவத் திரு. அடிசைகிழார் அ சிதம்பரனாரவர்கள் பத்தாந் திருமுறையாகிய திருமூலர் திருமந்திரம் குறிப்பு சொற்களை எல்லாம்எடுத்துவிளக்கிவிரிவுரையாற்றினார்கள். திரிசிரபுரம் திரு. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் „பதினொன்றும் திருமுறை" பற்றி சொற்பொழிவாற்றினார்கள் - பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணம் பற்றி - திரிசிரபுரம் வித்வான், திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் மிகச்சிறந்த முறையில் விரிவுரை செய்தார்கள். பின்பு, முதல்நாள் கொண்டு வந்த தீர்மானங்களெல்லாம் மீண்டும் வாசிக்கப் பெற்றுதலைவரவர்களாலும், சபையார்களாலும்அங்கீகரிக்கப் பெற்றன. தலைவரவர்கள் அன்று நடந்த சொற்பொழிவுகளுக்கெல்லாம்அறிவுநலனும் அன்புநலனும்மிகநிறைந்தமுடிவுரை கூறி, இப்போது உலகெங்கும் நிறைந்துள்ள அல்லல்கள் நீங்குவதற்குச் சிறந்தவழி, இறைவன் திருவடிகளில் மெய்யன்பு செலுத்தித் தொண்டுசெய்து வழிபடுதலும் இதுபோன்ற அறிவுரை வாயிலாக மக்களை நன்னெறிப் படுத்துதலுமே சிறந்த தொண்டு என்று கூறி வாழ்த்தினார்கள். திருமுறைகள் ஓத, அன்றைய நிகழ்ச்சி முடிபெற்றது. அதன்பின்னர் இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் தமது கோஷ்டியாருடன் சுமார் 3½ மணி நேரம் தேவார - திருப்புகழ் - திருவருட்பா ஓதினார்கள்.

கலைமகள் விழா.



ஆறுவது நாள் நிகழ்ச்சி.

16—5—44.

கலைமகள் விழாத்தலைவர், மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் இன்று வரக் கூடாமையைத் தெரிவித்ததின் பேரில், திருவாளர் திவான் பகதூர், T. M. நாராயணசாமி பிள்ளையவர்கள், யாழ்ப்பாணம், திரு சர். பி இராமநாதன் கல்லூரித்தலைவர் சைவத்திருவாளர், சு. நடேசபிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல், ஆக இருவரும் தலைமை வகித்தார்கள். முதலாவதாக திருமுறைகள் ஓதப்பெற்றன. இந்த ஆறுவது நாள் நிகழ்ச்சிக்கும் மேற்குறித்த தலைவரவர்களையே தலைமை வகிக்குமாறு சைவ சித்தாந்த சபை அமைச்சர் திருவாளர் முருகேச முதலியாரவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அங்ஙனமே திரு தலைவர் அவர்கள் கலைமகள் விழாவுக்கும் தலைமை தாங்கி கலைநலங்களெல்லாம் சிறக்கச் சிறந்ததோர் முன்னுரை கூறினார்கள். சென்னை, ஆசிரியர் திரு M. இராஜமாணிக்கம் பிள்ளை, B. O. L., அவர்கள் பெரிய புராணமும், கல்வெட்டுக்களும். என்பதைப் பொருளாகக் கொண்டு, சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரியபுராணத்தி லுள்ள சரிதங்களுக்கெல்லாம் கல்வெட்டுகளில் ஆதாரமுள்ளன என்றும், பெரியபுராணச் சரிதங்களெல்லாம் புனைந்துரை வகையான் அமைந்தன அல்லவென்றும், பல கல்வெட்டுச்சான்றுகள் கொண்டு சிறந்த ஆராய்ச்சி முறையில் விரிவுரை ஆற்றினார்கள். இத்தருணத்தில், இதுவரை தலைமை வகித்த உயர்திரு. திவான்பகதூர், T. M. நாராயணசாமி பிள்ளையவர்கள் உதகைக்குச்செல்லவேண்டிய அவசிய

மிருப்ப, உயர்திரு. சு. நடேசபிள்ளை அவர்களைத் தலைமை தாங்க கேட்டுக்கொள்ள அவர்களும் அன்புகனிந்து அதனை ஏற்றுக்கொண்டனர். வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள், மீண்டும் சபையார் விருப்பப்படி, திருவாசகப்பகுதிகளை ஆராய்ச்சி செய்தார்கள். திரு இராம கோவிந்தசாமி பிள்ளையவர்கள் "ஞான நடனம்" என்பதைப் பொருளாகக்கொண்டு, ஞானநூற் பொருள்களை எல்லாம் தெளிவாக எடுத்து சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் சிதம்பரம் சாமி சகஜாநந்தமவர்கள் "திருக்குறளும் சைவமும்" என்பதைப்பற்றி சிறந்த முறையில் விரிவுரை செய்தார்கள். தலைவரவர்கள் முடிவுரை கூறினார்கள். முற்பகல் நிகழ்ச்சி முடிவு பெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி.

திருமுறை, திருப்புகழ் ஓதுதலுடன் தொடங்கப் பெற்றது. முதலாவதாக சென்னை, சைவத்திரு, R. சண்முக சுந்தரஞ் செட்டியாரவர்கள் "கலைச்செல்வி" என்பதைப் பொருளாகக்கொண்டு கலைகளால் விளையும் நலன்களையும் இறைவனைக்காட்டும் சீரிய கலைகளின் சிறப்பையும் விரிவாக எடுத்து விளக்கினார்கள். தூத்துக்குடி, உபாத்தியாயினிகளின் கல்லூரித் தலைமை திருமதி. பங்காரு அம்மையார் அவர்கள் பி. ஏ., எல். டி., "பெண்கள் முன்னேற்றம்" என்பதைப்பற்றி இனிய முறையில் எடுத்துரைத்தார்கள். திரு. வித்துவான், ஆ. வ. தனஞ்சைய பிள்ளையவர்கள் "இயல் இசை நாடகம்" என்னும் பொருள்பற்றிப்பேசி முத்தமிழ் இயல்பெல்லாம் நன்கினி தெடுத்தியம்பினார்கள். தஞ்சை திரு. நா. சேஷாத்திரி ஐயங்கார் அவர்கள் "கவிநயம்" என்பதைப் பொருளாகக் கொண்டு பேசினார்கள். யாழ்ப்பாணம், திரு. குரு. சி. மாணிக்கத் தியாகராஜ பண்டிதரவர்கள் "நாடகத்தமிழ்" என்பதுபற்றி நடிப்புக் கலையின் நலன்களெல்லாம் சபையோர் கண்டு களிகூறுமாறு விளக்கினார்கள். அதற்கடுத்து வள்ளிமலை சுவாமி அவர்கள் "நாற்கவிராஜன்" என்பதைப் பொருளாகக்கொண்டு, தமது அருந்தவ மாணவிகளுடன் இன்னிசையோடு சொற்பொழி வாற்றினார்கள். தலைவரவர்கள் தக்கமுறையில் பின்னுரை

கூறி எல்லோரையும் மகிழ்வுறச்செய்து இதுபோன்ற மகாநாடுகளின் அவசியத்தையும் அதனால் மக்களுக்கு விளையும் நலன்களையும், செல்வப்பெருமக்கள் இதற்கு உதவிபுரிய வேண்டுமென்பதனையும் அறிவுடைய மக்களெல்லோரும் சொற்பொழிவுகளைக்கேட்டுப் பயன்பெறவேண்டுமென்றும் கூறி இறைவனைவேண்டி சபையை இனிது நிறைவு செய்தார்கள்.

தேவார இசை அரங்குகள்.

11 தேதி முதல் 16—5—44 தேதி வரையில்வள்ளிமலை ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள், தமது மாணவிகளுடன் இடை இடையே திருப்புகழ் முதலிய அருட்பாக்களை இன்னிசையோடுபாடி எல்லோருக்கும் பக்திப்பரவசத்தை உண்டுபண்ணியது பெரிதும் போற்றுதற்குரியது.

17-ம் பக்கம் தொடர்ச்சி.

(3) கொங்குநாட்டிலே, வருவாய் முதலிய எல்லா நலன்களும் அமைந்த பழநியம்பதியிலே, மேலே காட்டிய தீர்மானங்களை அங்கிகரித்துத் திருமுறைப் பாராயணம், திருமுறைத்திருவிழா, வேதசிவாகம பாடசாலை நியமன முதலியவைகளைத்தொடங்கிச் செம்மைபெறநடாத்துவித்து மற்ற திருக்கோயில் மேற்பார்வையாளர்களுக்கும் வழிகாட்டவேண்டுமென்று ஷை தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களையும் ஷை தேவஸ்தான ஆலோசனைக்கமிட்டி மெம்பர்களையும் சென்னை அறநிலயப்பாதுகாப்புக் கழகத்தாரையும் வேண்டிக்கொள்வது. அங்ஙனமே எல்லாக்கோயில் நிர்வாக அதிகாரிகளையும், ஆங்காங்குள்ள சைவப்பிரபுக்களையும், சைவஞானாதீனத்தலைவர்களாகிய திருவாவடுதுறை திருத்தருமபுரம் திருப்பனந்தாள்மடம் முதலிய திருமடாலயத்தலைவர்களையும் கேட்டுக்கொள்வது.

(4) மேலேகுறித்த தீர்மானங்கள், சென்னை, திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, சபைத்தலைவர் திரு. வ. வே. கா. ரா முருகேச முதலியார் அவர்கள் முதலிய பலரால் ஆமோதிக்கப்பெற்று எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

12, 13-5-44-ல் - சென்னை இசைவள்ளல் - சைவத்திரு சி. சங்கரலிங்கம்பிள்ளை அவர்கள், தமது கோஷ்டியாருடன் வந்து தேவார முதலிய அருட்பாக்களில், பல இனிய பாடல்களைப்பாடி கேட்போரைப் பரவசப்படுத்தினார்கள்.

12, 13-5-44-ல் பெங்களூர் திருமதி ராஜாம்பாள் அம்மையாரவர்கள் திருப்புகழ் முதலிய அருட் பாடல்களை சுராசாயித்யத்தோடு மிக அழகாகப்பாடி எல்லோரையும் மகிழச் செய்தார்கள்.

15-5-44-ல் சென்னை - இசைபரசு சைவத் திருவாளர். M. M. தண்டபாணிதேசிகர் அவர்களால், தேவார முதலிய இசைக்கச்சேரி, மிகச் சிறந்த முறையில் நடைபெற்றன.

பரத நாட்டியம் ஆடல் அரங்குகள்.

13—5—44.

நாட்டியக்கலை தமிழகத்தே செழித்தோங்கவேண்டு மென்பதற்காக அதனைப் பயிற்றுவித்துத் தேர்ச்சியடை யும்படிசெய்த சிதம்பரம் திரு N. தண்டபாணிபிள்ளை அவர் களின் புதல்வி திருமதி சி. த மங்கையர்க்கரசியாரின் பரத நாட்டியம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

16-5-44-ல் "பரதநாட்டியம்" ஆசிரியர், கோவை திரு. N. இலக்ஷமண முதலியாரவர்கள் "நாட்டியக்கலை" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றியதோடு, தமது மக்களிரு வர்களால் சிறந்த முறையில் பரத நாட்டியமும் அபினயித் துக் காட்டப்பெற்றது. அன்று இரவு 8 30 முதல் 12-30 வரையில் பந்தணைநல்லூர், திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மாணவி திருமதி, ஜெயலக்ஷமியம்மையாரின் பரத நாட்டியமும் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

திருப்புகழ் விழா,

இங்ஙனம்; முருகப்பெருமானது ஆறுபடை வீட்டுத் திருத்தலங்களுள்ளே சிறப்புற்று விளங்கும் திருவாவி னன்குடி என்ற பழநியம்பதியிலே ஆறுமுகப் பெருமானார் திருவருளால் ஆறு நாட்களும் நடைபெற்ற இந்தப் பெரிய சைவர் மகாநாடானது இதுகாறும் நடைபெற்ற பலசைவர்

பழநி சைவ சித்தாந்த சபை ஆண்டு விழா.

மகாநாடுகள்போல அல்லாது முதல் மூன்று நாள் முருகப் பெருமானது திருவடிக் கமலங்களில் தொண்டு பூண்டொழு கும் மெய்யடியார்களுக்கு ஒரு ஞான நல்விருந்தாய் அன்பு நெறியை வளர்ப்பதாயிருந்தது.

நான்காம் நாள் நடைபெற்ற சைவசித்தாந்த சபையின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவின் வாயிலாக, நில்லாத உலகியல்பை உணர்ந்த சமயசன்மார்க்கப் பற்றுடைய பெரி யார்களுக்கு "இது ஆதும் அது அல்ல" என்னும்பிணக்குடைய சமயங்களுக்குள்ளே ஒன்றாகாது எல்லாசமயங்களையும் சோ பானங்களாகத் தழுவிக்கொண்டு அவற்றிற்கு அதீதமாய் விளங்கும் சமய இலக்கணத்தையும், அச்சமயத் தெய்வ மாகிய சிவபெருமானது தனி முதற்றன்மையையும், அவரை அடையும் நெறியாகிய "ஞானம் ஈசன்பால் அன்பேயான" சாதனத்தின் இயல்பையும், அது வந்து பொருந்துதற்கு வாய்ப்பாகிய சரியை, கிரியா யோகங்களின் தன்மையும், அதனைச் செய்து பெறுவோராகிய ஆன்மாக்களின் இலக் கணங்களையும், அந்த ஆன்ம அறிவைத்தடை செய்து நிற் கும் பாசத்தின் இலக்கணங்களையும், அதன் வழியாய் வந்து பொருந்தும் கன்ம, மாயா பாசங்களின் இலக்கணங்களையும், மாயையின் மயக்க மொழிந்து, இருவினை ஒப்புநிகழ மலபரி பாகம் வந்து பொருந்த, குருவருளால் ஞான தெரிசனமும், பாச நீக்கமும், சிவப்பேறும் எய்த; அதனால், சீவன் முத்த நிலையை எய்திய சிவஞானிகளின் இலக்கணங்களையும், செம் மைபெற விளக்கி, சிவநெறி கடைப்பிடித்தற்கண் மனவிருப் பம் உண்டாகும்படி செய்தது.

திருமுறை திருப்புகழ் திருவிழா.

ஐந்தாம் நாள் திருமுறை திருப்புகழ் விழாவானது, அடியார்களுக்கு, பக்தி வைராக்கிய ஞானங்களைப் பயப்பிக் கும் திருமுறைகளின் பெருமைகளை விளக்குவனவாய், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதுவார்களுக்கு இன் னல்களைவதாய், இறைவனது திருவடிக் கமலங்களிலே மெய்யன்பை விளைவிப்பதாய், பெருநன்மை விளைத்தன.

கலைமகள் விழா.

கலைமகள் விழாவானது இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழின் இலக்கணங்களையெல்லாம் எடுத்து விளக்கி, மக்கட் பண்புடையார்க்கெல்லாம் மாண்பாகும் கலை நடனத்தை கேட்டோர் கருத்தில் பதிய வைத்தது.

இத்துணை நன்னெறிகளான் கடந்த ஆறுநாட்களிலும் வெளியூரிலிருந்து வந்த அன்பர்களுக்கு வரவேற்புக்கழகத்தாரால் உண்டி உறைவிட முதலிய வசதிகள் செய்தளிக்கப்பட்டன; இந்த மகாநாட்டுக்கென்று பொருளுதவி செய்த பெருங்கொடையாளர்களின் வள்ளற்றன்மை பாராட்டற்குரியது. இந்த மகாநாட்டை செம்மைபெற முடிப்பதே தமது விரதமாகக் கொண்டவர்களான, ஸ்ரீலஸ்ரீ மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமி அவர்களுக்கும், நமது பழநி முருகப்பெருமான் திருவடிக் கமலங்களிலே மெய்த்தொண்டு பூண்டொழுகுபவரும், சைவசித்தாந்த சபை நிரந்தரத் தலைவருமான ஈரோடு திருவாளர் V. V C R. முருகேச முதலியாரவர்களுக்கும், ஏனையசபை உறுப்பினர். கள் எல்லோருக்கும், சிறப்பாக பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிருவாக அதிகாரியும், தமிழுலகெங்கணும் சைவம், தழைத்தோங்கச் செய்வதே தமது வாழ்நாளின் முக்கியமான குறிக் கோளாகக்கொண்டு, அதற்கான தொண்டாற்றுபவர்களுமான, திருவாளர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், அவர்களைச்சார்ந்த மெய்யன்பர்கள், தேவஸ்தான உறுப்பினர்களுக்கும் சைவ உலகம் என்றும் குன்றாத நன்றி அறிதலும், கடப்பாடும் உடையது.

'வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகை மெல்லாம்''

திருச்சிற்றம்பலம்.

உ

பழநியாண்டவர் துணை.

1914-ஞு மே-மீ 11உ (தாரண ஆண்டு
சித்திரைத்திங்கள் 29-ஆம் நாள்) குருவார
தினந்தொடங்கி நடைபெறும்

பழநித் திருப்புகழ் மகாநாட்டுக்கு
விஜயம் செய்துள்ள

ஸ்ரீ பழநியாண்டவர் அருள்பெற்ற
ஸ்ரீ வள்ளிமலை குகைவாசி,

ஸ்ரீமந் சச்சிதானந்த சுவாமிகளுக்கும்

அவர்கள் அருட்புதல்வ அடியவர்களுக்கும்

பழநித் திருப்புகழ் மகாநாட்டின் வரவேற்பு.

——:o(:——

கொங்கு மலிதரு கொங்குநாட் டகத்தே
ஆனைச் சிர்பெறு பூநாச் சியிலே
செங்கோட்டு வேலர் செழுமல ரடியில்
தவங்கிடந்த மாதின் தவப்பய னாக
இறையடி மறவா மறைக்குலத் துதித்து
மைசூர் அரசின் மனையில் மடைக்கலைத்
தொழிலிற் றலைமை எழிலுறச் செயுநாள்
சுப்பிர அரனார் சூலைநோ யெனீ
அப்பரை ஆண்ட. அருட்டிறம் நிகர்ப்பச்
சென்மநோய் தீர்க்குஞ் செவ்வேற் பெருமான்
குன்மநோய் ஏவக் கொடுமையாற் றுதிவ்
வேலையே வேண்டேன் வேலையே துதிப்பேன்
பழநியை அடைவேன் பழவினை தொலைப்பேன்
எனத்துணிந் தெழுந்து மனத்திருள் நீங்கப்
பழநிவந் தடைந்து பண்புடன் வேட்கே
அபிடேக நீர்கொண்டு சேர்த்த லாதிய
சரியை கிரியைத் தவப்பணி செய்யச்

“சிங்கார ரூபமயில் வாகன நமோ” எனும்
“வங்கார மார்பெ”னும் வளம்பொலி திருப்புகழ்
தேவி னடியாள் திப்பிய இசையிற்
பாடக் கேட்டுப் பரவச மடைந்து
தழலிடு மெழுகெனுந் தன்மையிற் றிருப்புகழ்ப்
பித்தது கொண்டு சித்தம் உருகிட
நித்தந் திருப்புகழ் நியமத் தோதுநாள்
பச்சிம உத்தர தக்ஷிண பூர்வ
திக்குள பத்தர்கள் நெக்குநெக் குருகத்
திருப்புகழ் பாடத் திசைதொறுஞ் செல்லுவேன்
என்றோர் உணர்ச்சி எழலுங் கிளம்பிச்
சென்னையிற் சங்யாச நிலையினைச் சேர்ந்து
திருத்தணி யடைந்து கருத்துடன் போற்றி
நகைமுக விநோத ஞான குறமின்
நினைவார் சித்தம் அகலா நிழலாள்
போக பூமி புரந்தருள் தேவி
வள்ளி யாடிய வள்ளி மலையதே
சித்தித் தலமெனத் தேர்ந்தங் கடைந்து
சில்லாண் டிருக்கத் தேவி யருளால்
இசைக்கலை யெல்லாம் இனிது கைவரச்
செந்தமிழ் நாடெலாம் திரிந்து பரிந்தே
எங்குந் திருப்புகழ் இன்னிசை பரப்பிக்
கணக்கிலாச் சீடர் கதிபெற அருளி
வள்ளி மலையே வாழிட மாக
வதிந்து மகிழும் மாண்பெறு தவத்தோய்!
‘நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்’
என்னுநன் னோக்கால் எழுந்த இச்சையால்
குறக்குலப் பெண்முதல் மறைக்குலப் பெண்வரை
கைம்மா றொன்றுங் கருதா வகையில்
உய்யுமா றவர்க்கங் குவப்புட னென்றும்
திருப்புகழ்ப் பாடஞ் செப்பிக் குளிர்வோய்!
எழுத்துகள் சிறைந்தில இசைகள் பொலிந்தா

சந்தஞ் சிதைந்தில தாளம் பொலிந்துள
என்றுபல் லோரும் ஏத்துறு வகையில்
திருப்புக ழென்றுஞ் செப்புந் திறத்தோய்!
இன்றுநின் வரவால் இம்மகா நாடு
மதிபொலி விசும்பென மணம்பொலி மலரென
நதிபொலி நாடெனச் சுதிபொலி யாழென
நிதிபொலி வாழ்வென நிஜம்பொலி வாக்கென
எழில்விளக் கம்பெற் றிலகு மாதலால்
பழநி யாண்டவர்த் தொழுபவ வருக!
வள்ளி மலைவாழ் வள்ளால் வருக!
அடியார் தமதடிப் பொடிசூ டிய எந்
சச்சிதா னந்தச் சாமி வருக!
திருபுக ழடியார் திருவடிச் சென்னியார்
எனப்பெயர் பூண்ட இன்பனே வருக!
பத்திப் பயிரைப் பண்புற வளர்க்கும்
வித்தக முகிலே! வேதிய! வருக!
திருப்புகழ்க் குபேர விருப்புடன் வருக!
மயிலையும் அவன்கை அயிலையுங் கடைக்கண்
இயலையும் நினைக்க எல்லிரும் வாரீர்
எனஅறை கூவும் எழில்வீர வருக!
திருப்புகழ் யோகி! திருப்புகழ் ஞானி!
வருக வருகநின் மாணவர் குழாத்துடன்
அமர்க அமர்க இம் மாநாட் டதிபராய்,
பொழிக பொழிக புகழ் மழை மேகமே!
வழங்குக வழங்குக மயிலோன் ப்ரசாதமே

பழநி,
11-5-14.

வேலும் மயிலுந் துணை.

உ

சிவகுகமயம்,

பழநித்திருப்புகழ் மகாநாட்டுத் தலைவர்

சிவகுகத்திரு, கிருபானந்தவாரியர் அவர்களுக்கு

வாசித்தளித்த

நல்வரவேற்பு.

சிவகுகப்பெருமான் திருவடி மறவாச் சிந்தையோய்!

வருக. வருக; வருக, வருக,

வருக! நின் வரவு, நல்வரவாகுக!

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பாலயம்" என்று திருமூலரும், "எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்; இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்று சிவ ஞான தீபமுங் கூறியாங்கு, "நிற்பனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயாய்" நிற்கும் நிலையை, அவ்வறு முகச்சிவனார் திருவருட்டுணைகொண்டு, மெய்மையாக வே உணர்ந்து, "கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க, எல்லார்க்கும்" எடுத்து இசைப்பதே தங்க ளது வாழ்நாளின் குறிக்கோள் எனவும், செந்தமிழ்த் தனிநேயமே தங்களது வாழ்நாளின் பெரும்பேறு என வுங்கொண்டு, "கந்தரனுபூதி பெற்று கந்தரனுபூதி சொன்ன எந்தை அருணடி" நின்று, நல்லிருள் என் றும், நற்பகல் என்றும் நோக்காது எங்குஞ்சென்று, எஞ்ஞான்றும் சொற்பொழிவாற்றிச் சிவநெறி வளம் படுத்தும் சிரியோய்! வருக, நின் வரவு நல்வரவாகுக;

ஒழுக்கமே உயிரினுஞ் சிறந்ததென்று அறை வோய்!

தாங்கள் ஆற்றிவரும் சிவகாருண்ய வொழுக்கம், "வறியார்க் கொன்றீவதே ஈகை" எனப்படும் அன்ன தானப்பணி "சிவகுக வழிபாடு" என்றின்னோரன்ன, சிவ தருமங்களெல்லாம் இந்நிலவுலகிலே, செவ்வே செழித்து நிலவுதற்குக் காரணம்; பூசு நீறுபோல் உள் ளும் புனிதமான தங்களது பொதுச் சிறப்பு ஒழுக்கமே அன்றோ!

30-ம் பக்கம் பார்க்க.

உ

சிவகுகமயம்,

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி சுவாமியின்
திருவருள் யாண்டும் முன்னின்றருள்க:
ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க:

பழநி சைவ சித்தாந்த சபையின் 3வது ஆண்டுவிழாத் தலைவர்
உயர் சைவத் திருவாளர்
சு. நடேசபிள்ளை அவர்கள் பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.ஸி.,
இராமநாதன் கல்லூரித் தலைவர், சுன்னாகம், யாழ்ப்பாணம்,
அவர்களுக்கு வாசித்தளித்த

நல்வரவேற்புரை.

கற்றவர் போற்றும் நற்றவர் தலைவ!
வருக! வருக! வருக! வருக!
வருக, நின்வரவு நல்வரவாகுக!

வந்து தமிழின் இனிதின் இருந்து வள்ளிமணாளன்
வண்புகழ் வழங்குக,
புலியனன் குடிலையம் பொருட்டு, மாலுற, ஆவினன்
குடிவரும் அமலர்ப்போற்றும்
உயர் சைவப் பெருந்தகையாள!

பொன்னி நாடெனும் சோழவள நாட்டில், செந்தமிழ் குடி மேய சைவ சித்தாந்த செந்நெறியாய, உயர் குலத்துத் தோன்றி, கல்வி, கேள்வி மிக்க நுமது வரவு நல்வரவாகுக.

தமிழ் நாட்டில் தோன்றினும், தாங்கள் இலங்கையின் தவப்பயனைத் தோன்றிய தமிழ்த் தாயின் வீரப் புதல்வரும், ஞானப்புதல்வருமான சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மருகராகச் சென்று அங்கு தமிழ் மக்களின் பெருந் துணையாகவும், ஆதரவாகவு மிருந்து, அருஞ்செயல் செய்யும் தங்கள் பேரறம் என்றும் நிலைபெறுவதாக.

இலங்கையின் அரசாங்கத் துறையிலும், பல்கலைக் கழகத்திலும் தாங்கள் செய்துவரும் அரும் பணிகளை நாங்கள் பெரிதும் பாராட்டி மகிழ்கிறோம்.

இன்னும், தாங்கள் இராமநாதன் கல்லூரியின் தலைமை தாங்கியும் தமிழ் மக்கள் உயிரினும் மிக்க கல்வியில் மேம்பாடடையச் செய்துவரும் அரிய பணியை மிகவும் போற்றுகிறோம். பல்துறைகளில் ஈடுபட்டு உழைத்துவரும் தாங்கள் தங்களது சிரமத்தைச் சிறிதும் கருதாது இச்சபையின் ஆண்டு விழாவில் தலைமை வகிக்க கேட்டுக்கொண்ட எமது வேண்டுகோளுக்கிணங்கி இலங்கையிலிருந்து இதற்கென வந்தருளிய தங்கள் பெருந்தகைமையைப் பெரிதும் போற்றுகின்றோம்.

பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி சுவாமியின் திருவருளால், தாங்கள் "நோயின்றியன்ற யாக்கையும்" வாழ்க்கைச் செழுங்கிளை வழிவழி தழைத்தோங்க, எல்லா நலனும் பெற்று வாழ்கவெனத் திருவருளை வழுத்துகின்றோம்.

பழநி, 15—5—44.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,

பழநி சைவ சித்தாந்த சபையார்.

29-ம் பக்கம் தொடர்ச்சி.

இங்ஙனம் பல்லாற்றானும் எங்கள் திருப்புகழ் மகாநாட்டிற்குத் தலைமை தாங்குதற்குரிய தாங்கள், எங்கள் வேண்டுகோட்கிசைந்தமைக்கு பெரிதுங் கடப்பாடு உடையேம்.

தங்கட்கு நீண்ட வாழ்நாளும், நோயின்றியன்ற யாக்கையும், பல்கிளைச் செழுவளனும், ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளுக்கு எளிவந்தருளிய சிவகுகப் பெருமான் திருவருளும் பொருந்துக என்று, அப் பெருமானார் பொன்னடிக் கமலங்களைப் போற்றுகின்றோம்.

மகாநாட்டு மூன்றும் நாள் 13—5—44.

இங்ஙனம்,

வரவேற்புக்கழகத்தார்,

இரண்டாவது திருப்புகழ் மகாநாடு பழநி.

உ

சிவகுகமயம்,

பழநி, திருமுறைத் திருப்புகழ் விழாவில்

15—5—44ல் தலைமை தாங்கும்

சென்னை இந்து மத, அறநிலயப் பாதுகாப்புக் கழகத் தலைவர்,

உயர் திருவாளர்,

திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை,

M. A, B. L, அவர்களுக்கு வாசித்தளித்த

நல்வரவேற்புரை.

பொன்னி நதிசூழ் தென்னாட்டிற் றோன்றிய பெரியோய்!

வருக! நின்வரவு நல்வரவாகுக!!

கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குந் தாங்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் திகழ்ந்துதாங்கள் திருச்சிராப்பள்ளி மாநாட்டாண்மை கழகத் தலைவராய் அமர்ந்தும், அரசியல் வழக்கறிஞரா யிருந்தும், செய்த பொதுத் தொண்டினை யாவரே அறியார்! தங்கட்கு பல அலுவல்களிருந்தும் எங்கள் வேண்டுகோட் கிசைந்து திருமுறை விழாவில் தலைமை தாங்க இசைந்த தங்கட்கு, எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல்லாப் பணியிலும் இறை பணியை மறவாத தாங்கள், சென்னை மாகாண இந்துமத பரிபாலன கழகத்துக்குத்தலைவராய்அமர்ந்ததுபெரிதும்பொருத்த முடையதேயாகும். தாங்கள் தலைவராக வந்தபிறகு, அறநிலயங்கள் பெரிதும் சீர்திருத்தம் பெற்றுள்ளன. அது தங்களுடைய உழைப்பின் பயனேயாகும். திருமுறைத் திருவிழாவிற்கு தலைமை வகிக்க இயை புடையவர்கள் தாங்களே.

தேவாலயங்களில் திருப்பணி நடைபெற்று வருகின்றன; ஆலயங்களில் வரலாறுகள் எழுதப்பட்டு வருகின்றன; திருவிழா நாட்களில் சமயச் சொற் பொழிவுகள் நடைபெற்று வருகின்றன; கோயில்

களில் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்; திருமடங்கள் சிறப்பாகச் சமயப்பணி புரிந்து வருகின்றன.

சிறப்பாகத் தங்கள் நாளில் சமயத்தின் உண்மைக் கருத்தை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு சமயப் பிரசாசர்களை ஏற்படுத்தி இருப்பதும், திருக்கோயில் வரலாறுகளை வெளியிடச்செய்து வருவதும் பெரிதும் பாராட்டற்குரியனவாம். தமிழ்ப் பயிற்சியும், சமயப் பயிற்சியும் பெரிதும் உள்ளவர்களே இனி, திருக்கோயில்களில் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருந்தால், திருமுறை ஓதுதல், சமயப் பிரசாரஞ்செய்தல் முதலியவற்றை நன்கு ஆதரித்ததற்கு உரியராவர். திருக்கோயில்கள் தோறும் பயிற்சிபெற்ற ஓதுவார்களைத் தக்க சன்மானங்கொடுத்து நியமித்துத் திருமுறைகளை ஓதித் திருமுறை விழாக்கொண்டாடும்படி செய்ய வேண்டுகிறோம். பொருள் வசதியுள்ள கோயில்களில், தமிழ்க் கல்லூரி, சமயக் கல்லூரி தேவாரக் கல்லூரி முதலியன ஏற்படுத்த வேண்டுகிறோம். இவை எல்லாம் பண்டுதொட்டே ஆலயங்களில் நடைபெற்று வந்தன என்பதைக் கல்வெட்டுக்களாலும், சரிதங்களாலும் அறியலாம்.

எங்கள் வேண்டுகோட்கிசைந்து, ஈண்டு விஜயம் செய்த தங்கட்கு மீண்டும் ஒருமுறை எங்கள் மனமார்ந்த நன்றியறிதலையும், வணக்கத்தையும், தெரிவித்துக்கொள்வதோடு, தாங்கள் எல்லா நலன்களோடும் நீடூழி வாழ்ந்து, நித்தியானந்த நின்மலன் திருவடிப் பணிபுரிய, பழநி ஸ்ரீ ஞானதண்டபாணிப் பெருமான் திருவடிகளை வணங்குகின்றோம்.

பழநி, இங்ஙனம் தங்களன்பிற்குரிய,

15-5-44. பழநி, திருப்புகழ் மகாநாட்டுக் கழகத்தார்.